
# ஞா
# ன
# ஒ
# லி

www.newwisdomministries.com



ஞானம் 07 – ஒலி 06 – 11.02.2024

# ஆசிரியர் பக்கம்



அன்பும், பாசமும் நிறைந்த எனக்குப் பிரியமான உடன்பிறவா, சகோதர, சகோதரிகளே, இந்த ஞான ஒலி இணைய இதழின் வழியாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. நம் மீட்பர் இயேசு நமக்காகவே சிந்திக்கின்றார், அனைத்தையும் செயல் படுத்துகின்றார். அவர் வாழ்வதும், இருப்பதும், இயங்குவதற்குக் காரணம் ஒன்று உண்டென்றால் அது நமக்காகத்தான். அதேபோன்று நாமும் அவருக்காகவே இருக்கவும் வாழவும் வேண்டும் என்று அவர் அளவற்ற நம்பிக்கை வைத்து அதையே நம்மிடமிருந்து அணு நிமிடத்திலும் எதிர்பார்க்கின்றார்.

இந்த உலகையும், மற்ற அனைத்தையும் படைத்துவிட்டு, அவற்றில் எதிலும் நிறைவு காணாது தன் முழு அன்பையும், ஞானத்தையும் உருக்கி மனிதனைப் படைத்த நிமிடத்தில்தான் முழு நிறைவை அனுபவித்தார். படைப்புகளிலேயே அதிவுன்னத படைப்பாக மனிதனைக் கண்டு பெருமிதம் அடைந்தார். படைப்பு ஒவ்வொன்றிலும் இறைவன் இருக்கின்றார். ஏனென்றால், அவரின் எண்ணத்தில் இருந்து உருபெற்றவை. ஆகவே அவரின் நீட்சியாகவே அனைத்துப் படைப்புகளும் உள்ளன. எல்லாவற்றையும்விட கடவுள் மனிதனை தன் சாயலிலும், உருவிலும் உண்டாக்கினார். அவர் தன் சாயலில் ஒருவாக்கியதற்கு ஒரு காரணம் இருந்தது..அந்த உருவில்தான் தானும் மனிதனாக பிறக்க வேண்டும் என்ற திட்டம்தான் அது. கடவுள் விண்ணகத்தில் இருந்து படைத்த அவர், அவனோடு வரலாற்றில் மனித இனத்தோடு என்றும் தொடர்பில்தான் இருந்தார், ஆனால் மேகத்திற்குள் மறைந்து, குரல் வழியாக தொடர்புகொண்டார். மோயீசன் மட்டும் இறைவனோடு முகமுகமாய் பேசினார். இருந்தாலும், இறைவன் மனிதனோடு மனிதனாக வாழ மிகுந்த ஆசை கொண்டார்.

தான் படைத்த படைப்புகளை முக்கியமாக மனித இனத்தின்மீது தான் எவ்வளவு அன்பு வைத்திருக்கின்றார் என்பதைக் காட்டவும், பாவத்தில் வாழ்வதைவிட, தன்னைப்போல் தூயவராய் வாழ்வதே, பேரானந்தம் என்பதை வாழ்ந்து காட்ட விரும்பினார். அதனால் அவர் மனிதனாகப் பிறந்து, தனது இரத்தினாலும், உயிர் தியாகத்தாலும் கல்வாரியின் உச்சியில் உலகில் யாரும் போதிக்காத, வாழாத வாழ்க்கையை வாழ்ந்து உலகை விழிக்க வைத்தார். இருளின் சக்திகளை அடியோடு அழித்து, தங்களின் தூய வாழ்வினால், அதை தனதாக்கிக்கொள்ள கற்றுக்கொடுத்தார். அதுவே சிலுவைப் போதனை.

அந்த போதனை மிகமிக சாதாரணமானதல்ல. அதனை அடைவது சிரமமானது. அந்த சிரமத்தை வெல்வதற்காகத்தான், தவமும், உண்ணா நோன்பும், ஆன்மீக பயிற்சியும் பெற, அந்த சிரமத்தை இவற்றின் வழியாக எளிதாக்குவதற்காகத்தான் அமைக்கபட்ட இடத்திற்கு ஆ-சிரமம் என்று பெயர் வைக்கப்பட்டது.

தனித்திருக்கவும், பசித்திருக்கவும், விழித்திருக்கவும்...எப்போதும் இறைச் சிந்தனையோடு பயணிக்கவும், அந்தப் பேரானந்தத்தை எப்போதும் அனுபவிக்கவும், ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்த ஆசிரமத்தை உலகளவில் விரிவாக்கி அனைவரையும் அந்த

தவசிந்தனையோடு இருக்க வைக்கத்தான் திருஅவை ஒவ்வொரு வருடமும் தவக்காலத்தை நமக்கு ஒரு தவிர்க்க முடியாத, தவிர்க்கக்கூடாத ஓர் ஒழுக்கமாக கொடுத்திருக்கின்றது.

பாவத்தின் வாசல் வழியாக நுழைந்து அதன் பாவச் சேற்றில் வாழ்வதனால் கிடைக்கக்கூடிய பலன் சாம்பலைப்போன்று ஒன்றும் இருக்காது என்ற சிந்தனையை நமக்கு தவக்காலத்தின் ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்ட சாம்பல் புதனன்று நமது நெற்றில் சாம்பல் பூசப்படுகின்றது. அதற்கும் ஒரு காரணம் உண்டு. இந்துமத நம்பிக்கை கொண்டவர்கள் தினமும் தங்களின் நெற்றியில் திருநீரைப் பூசிக்கொள்வார்கள். அதோபோன்ற கலாச்சார தழுவலாக, நமது நெற்றியில் சாம்பல் பூசுதல் கடைப்பிக்கவில்லை.

நமக்கு இது மீட்பின் வரலாற்றில் கடைப்பிடிக்கப்பட்ட ஒரு சிறப்பான கடமையை, கட்டளையின் பழக்கம் என்பதுதான் இதிலுள்ள சிறப்பு. இஸ்ரயேல் மக்கள், இறைவனின் கட்டளைகளைத் தங்கள் உயிருனும் மேலாகக் கருதி அவற்றை அணுவளவும் மாறாது கடைப்பிடித்தார்கள். இந்தக் கடமையை எப்போதும் மறவாதிருக்கவும், அது தங்கள் மனதில், எண்ணத்தில், உயிரில் கலந்திருக்கவும் வேண்டும் என்பதற்காக, -இஸ்ரயேலே கேள்- என்று இறைவன் சொன்ன கட்டளை எழுதப்பட்ட ஒரு பொருளை ஒரு சிறு குப்பியில் வைத்து அதனை தங்களின் நெற்றியில் கட்டிக்கொளவார்கள். அது தனது நெற்றில் பட்டுக்கொண்டிருப்பதால், அவர்கள் இறைவனின் கட்டளையை மறவாதிருப்பார்கள். அந்த சிறு குப்பி தங்கள் உயிரினும் மேலாக, எல்லாவற்றிற்கும் மேலாக தங்களின் ஆழ்மனதில் பதிக்கப்பட்டுள்ள இறைக்கட்டளையின் வெளி அடையாளமாகத்தான் அந்த சிறு குப்பியை தங்களின் நெற்றியில் அணிந்திருக்கின்றார்கள். இன்றும் அந்தப் பழக்கம் தொடர்கின்றது.

அதேபோன்று, நாமும் இறைவனைப்போல், தூயோராக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். அந்த இறைக்கட்டளையை நமது உள்ளத்தில் பதித்து அதனையே வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்கவேண்டும் என்பதற்காகத்தான் நமது நெற்றியில் சாம்பல் பூசப்படுகின்றது.

இறைவன் முன்னால் தூசிக்கும், சாம்பலுக்கு சமமானவர்கள் என்ற சிந்தனை வந்தால்தான். இறைவன் அந்த சாம்பலிலிருந்து நம்மை தூயோராக உயிர்தெழ வைப்பார் என்ற நம்பிக்கையே இந்த தவவாழ்வை அர்த்தமுள்ளதாக்கும்.

வெளிப்புற அடையாளங்கள் உள்ளார்ந்த நிலையை உறுதி செய்வதாக அமைய வேண்டும். உள்ளொன்று வைத்து புறமொன்று வைத்திருப்பது முரணாக இருப்பதுதான் வெளிவேடமாகிவிடும். உள்ளத்தின் நிறைவே நம் பொதுவாழ்வாக அமைவது தனிமனித ஒழுக்கமாகும். அவர்களையே இறைவன் விரும்புகின்றார். இந்த தவநிலை சடங்காகவோ, கடமைக்காகவோ, நிர்ப்பந்தத்தாலோ, வேஷமாகவோ இருப்பது தனக்கே அவமானத்தையும், இறுதியில் இந்தத் தவமும் சாம்பலாகத்தான் போகும் என்பதுதான் உண்மை.

நாம் இவ்வுலகில் இறைவனின் முழுவெளிப்பாடாக, நமது நன்மைக்காக, நமது உத்தரவில்லாமல் இறைவன் நம்மைப் படைத்தார். ஆனால், இறைவனை மறந்து பாவிகளாக வாழ்பவரை தூயோராக வாழ அழைக்கின்றார். நமது மீட்பை நாம்தான் உறுதி செய்யவேண்டும் என்று கெஞ்சுகின்றார். நமது உத்தரவின்றி, விருப்பமின்றி நம்மை அவர் தூயோராக்குவதில்லை. அதற்காகத்தான் கடவுள் தன்னை வருத்தி, இரத்தம் சிந்தி, தன் உயிரை நமக்காகத் தியாகம் செய்து வருந்தி அழைக்கின்றார்.

தூய வாழ்வே மீட்பினால் கிடைக்கப்போகும் மாபெரும் பரிசு. அதன் கனிகள் அரிதினும் அரிது. ஞானமுள்ளவரே தூயவழியைத் தேர்ந்தெடுப்பர். நாமும்தான்.



# விவிலியம் அறிவோம்




## மோசேயின் மூன்றாவதுஉரை

மோசேயின் மூன்றாவது உரை இச 28:1 இல் தொடங்கி 32:52 இல் முடிவடைகிறது. இந்த உரையில் மோசே கடவுள் செய்த வல்லசெயல்களை நினைவு கூர்ந்து மக்கள் கடவுளுக்குப் பிரமாணிக்கம் உள்ளவர்களாக வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். இந்த உரையின் சுருக்கமாக இச 30:15-20 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் உள்ளன. மக்கள் முன்னிலையில் கடவுள் நன்மையையும் தீமையையும், வாழ்வையும் சாவையும் வைத்துள்ளார். மக்கள் நன்மையையும் வாழ்வையும் தேர்ந்தெடுக்க வேண்டும் என அழைக்கப்படுகிறார்கள். மக்கள் எதைத் தேர்வு செய்கிறார்களோ அதைப் பொருத்துதான் வாக்களிக்கப்பட்ட நாட்டில் அவர்களின் வாழ்வு அமையும்.

இச 29:1-8 வரையுள்ள இறைச்சொற்றொடர்களில் மோசே இஸ்ரயேல் மக்களின் வரலாற்றைச் சுருக்கமாக நினைவு கூர்கிறார். எகிப்தின் அடிமைத்தனம், விடுதலைப் பயணம், பாலைவனப் பயணம், மற்றும் வாக்களிக்கப்பட்ட நாட்டை வெற்றிகொள்ளுதல் ஆகியவை இஸ்ரயேல் மக்கள் எப்போதும்; நினைவில் கொண்டிருக்க வேண்டிய நிகழ்வுகள். இஸ்ரயேல் மக்களின் இந்த வரலாற்றுப் பயணத்தில் கடவுள் எவ்வாறு தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்; அவர்களைப் பாதுகாத்து, பராமரித்து வழிநடத்தினார் என்பவை இப்பகுதியில் சிறப்பாக நினைவுகூரப்படுகின்றன. நாற்பது ஆண்டுகள் நான் உங்களைப் பாலைநிலத்தில் கூட்டி வந்தேன். அப்பொழுது உங்கள் மேலுள்ள ஆடைகள் நைந்து போகவில்லை; உங்கள் காலிலுள்ள காலணிகள் பழுதடைந்து போகவுமில்லை (இச 29:5) என்ற வார்த்தைகள் கடவுள் எவ்வாறு அவர்களைப் பராமரித்துக் காத்து வந்தார் என்பதை வெளிப்படுத்துகின்றன. நாற்பது ஆண்டுகளாக இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் பயணம் செய்யும்போது அப்பம் உண்ணவோ, இரசம் குடிக்கவோ, மதுபானம் அருந்தவோ இல்லை (இச 29:6). இவற்றிற்குப் பதிலாக ஆண்டவர் அவர்களுக்கு மன்னாவையும் நீரையும் அளித்தார். அதைப்போல எஸ்போனின் அரசனாகிய சீகோனை வென்றதும் பாசானின் அரசனாகிய

உ ட ன் ப டி க் கை க க் கு உண்மையுள்ளவர்களாக வாழ வேண்டும். இச 29:15-30:20 வரையுள்ள இறைச் சொற்றொடர்கள் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறியபின் கடவுளுக்குப் பிரமாணிக்கமாக இருக்க வேண்டியதைப்பற்றிப் பேசுகின்றன. எதிர்காலத் தலைமுறைகள் இதை நினைவில் கொள்ள வேண்டும். எபிரேயத்தில் ஒரு தலைமுறை என்பது நாற்பது ஆண்டுகளைக் குறிக்கும். கடவுள் இஸ்ரயேல் மக்களின் மூதாதையான ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கை இன்னும் தொடர்கிறது. உடன்படிக்கையின் மக்கள் என்ற முறையில் இஸ்ரயேல் மக்கள் சிலை வழிபாட்டைத் தவிர்க்க வேண்டும். வேற்று சமயங்களுடன் எந்தச் சமரசமும் செய்யக்கூடாது. மரத்தாலும், கல்லாலும், வெள்ளியாலும் பொன்னாலும் செய்யப்பட்ட தெய்வச் சிலைகளைக் கடவுள் அருவருப்புகளாகப் பார்க்கிறார் (29:17).வேற்றினத்தவரின் தெய்வங்களை நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ வழிபடுபவர்கள் மீது ஆண்டவர் இரக்கம் காட்டமாட்டார்; ஆண்டவரின் சினமும் சகிப்பின்மையும் அவர்கள்மீது கனன்றெரியும். ஆண்டவர் அவர்களது பெயரை மண்ணுலகினின்று துடைத்து விடுவார் (29:20) எனக் கூறப்படுகிறது. இஸ்ரயேல் மக்களை பிற இனத்தவரிடமிருந்து பிரித்துக் காட்டுவது அவர்களின் கடவுள் வழிபாடுதான். பண்டைய காலத்தில் தெய்வச் சிலைகளில் தெய்வங்கள் பிரசன்னமாக இருக்கிறார்கள் என மக்கள் கருதினர். எனவே தெய்வச் சிலைகள் மற்றும் குறிசொல்லப் பயன்படுத்தப்பட்ட சிலைகளைக் கடத்திச் சென்றனர் (தொநூ 31:19-35). தெய்வச்சிலைகள் அழிக்கப்பட்டால் அதை அழிக்கின்றமக்கள் பாதிக்கப்படுவார்கள் (1 சாமு 5:1-5) என்ற கருத்தும் மக்களிடையே இருந்தது. வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறியபின் இஸ்ரயேல் மக்கள் வேற்றினத் தெய்வங்களால் ஈர்க்கப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. பண்டைய கால இஸ்ரயேலர் மரபுகள் பல கடவுளர்களின் இருப்பை ஏற்றுக் கொண்டாலும் பிற இனத்தவர்களின் தெய்வச் சிலைகளை, உருவங்களை நையாண்டி செய்தார்கள்; பரிகசித்துப் பேசினார்கள் (திபா 115:4-8). வேற்றுத் தெய்வங்களை வழிபடுவதால் வருகின்ற சாபங்கள் நிலத்தைப் பாழ்படுத்திவிடும் எனக் கூறப்படுகிறது. இந்தச் சூழ்நிலை சோதோம், கொமோரா, அத்மா, செபோயிம் ஆகிய நகரங்களுக்கு நடந்ததுடன் ஒப்பிடப்படுகிறது. ஆண்டவர் தம் சினத்திலும் சீற்றத்திலும் வேரறுத்த சோதோம், கொமோரா, அத்மா, செபோயிம் போன்ற இடங்கள் அழிந்ததைப்போல, இந்த நாட்டின் நிலம் முழுவதும், கந்தகமும் உப்புமாக வெந்துபோய் விதைப்பும், விளைச்சலுமின்றி யாதொரு புற்பூண்டும் முளைக்காமல் (29:23) இருக்கும் என்கிறார் கடவுள். எனவே வேற்றினத் தெய்வங்களைப்

ஓகை முறியடித்ததும் கடவுளின் உடனிருப்பையும் பாதுகாப்பையும் வெளிப்படுத்துகின்ற நிகழ்வுகள்.

கடவுள் இஸ்ரயேல் மக்களுடன் செய்த உடன்படிக்கைக்கு எப்போதும் உண்மையுள்ளவராக இருந்தார். அவர்களைப் பாதுகாத்து, பராமரித்து வழி நடத்தினார். இஸ்ரயேல் மக்கள் இதை அனுபவப் பூர்வமாக உணர்ந்தாலும் தொடர்ந்து கடவுளுக்கு எதிராகக் கிளர்ச்சிகள் செய்தனர். கீழ்படியாமையால் கடவுளுக்கெதிராகப் பாவம் செய்தனர். இஸ்ரயேல் மக்களின் பிரமாணிக்கமின்மை கடவுளுக்கு கோபத்தை ஏற்படுத்தினாலும் அவர் அவர்களைக் கைவிடவில்லை. முதல் பெற்றோரான ஆதாமும் ஏவாவும் ஏதேன் தோட்டத்தில் உலாவியபோது அத்திமர இலைகளால் செய்த ஆடைகளை அணிந்திருந்தார்கள்; ஆனால் பாவத்தின் விளைவாக ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேறியபோது கடவுள் அவர்களுக்குத் தோல் ஆடைகள் செய்து அணியச் செய்தார் (தொநூ 3:21) எனப் பார்க்கிறோம். இச்செயல் கடவுளின் இரக்கத்தின் வெளிப்பாடாகப் பார்க்கப்படுகிறது. அதைப்போல இஸ்ரயேல் மக்கள் கடவுளுக்கெதிராகப் பாவங்கள் செய்தாலும், அவர்களின் நீண்ட பாலைவனப் பயணத்தில் கடவுளால் அவர்கள் பராமரிக்கப்பட்டார்கள்; ஆண்டவருடைய வல்லமை அவர்களை வழிநடத்தியது (விப 16-17). கடவுளின் இந்த ஆசிர்கள் அனைத்தும் மக்கள் கடவுளைப் பற்றி அதிகமாக அறிய உதவுகின்றன. இஸ்ரயேல் மக்கள் இவற்றைத் தொடர்ந்து நினைவு கூர்வதன் வழியாகவும் மீண்டும் மீண்டும் சொல்லுவதன் வழியாகவும் கடவுளை அறிந்து கொள்கின்றனர். கடவுளின் வல்லமை நிறைந்த செயல்களை நினைவுகூரும் அவர்கள் எப்போதும் கடவுளுக்கு உண்மையுள்ளவர்களாக வாழவேண்டியது அவசியம்.

இச 29:9-14 வரையுள்ள இறைச் சொற்றொடர்கள் இஸ்ரயேலரின் உடன்படிக்கை உறவை வலியுறுத்திப் பேசுகின்றன. மக்கள் கடவுளின் திருமுன்னிலையில், உடன்படிக்கையின் பங்காளிகளாக நிற்கிறார்கள்; கடவுளின் திருமுன்னிலையில் அவர்கள் நிற்பது ஒரு இலட்சியத்தை வெளிப்படுத்துகிறது; ஒரு நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதைக் காட்டுகிறது. எனவே மக்கள் துணிவோடு செயல்பட வேண்டும். ஆண்டவர் அவர்களுடன் பயணிக்கிறார் என்பதை அறிந்தவர்களாகச் செயல்பட வேண்டும். ஆண்டவர் திருமுன்னிலையில் அவர்கள் புதுப்பிக்கும் உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக வாழ வேண்டும். கடவுளின் திருமுன்னிலையில் உடன்படிக்கையின் பங்காளிகளாக நிற்பவர்கள் மட்டுமல்ல அவர்களின் வழிமரபினராக வருகின்ற ஒவ்வொரு தலைமுறையினரும் இந்த

பொருத்தமட்டில் எதிர்காலச் சந்ததியினர் வாக்களிக்கப்பட்ட நாட்டில் வாழுகையில் எந்தச் சமரசமும் செய்யக்கூடாது.

கடவுளின் கோபம் ஆற்றல் வாய்ந்தது, பயனுள்ளது. பழைய ஏற்பாட்டில் கோபம் என்ற கருத்தின்கீழ் வருகின்ற குறிப்புகளில் கடவுளே காரணராக உள்ளார்; இஸ்ரயேல் மக்களின் பாவங்களுக்கு அவர் ஆற்றுகின்ற எதிர்வினையாகக் கடவுளின் கோபம் வருகிறது. அதே வேளையில் கடவுளின் கோபம் அவரது அன்பு மற்றும் இரக்கத்தால் சமநிலைப் படுத்தப்படுகிறது. பண்டைய மேற்காசிய நாடுகளின் உடன்படிக்கை விதிகளைப் போலல்லாமல் இணைச்சட்ட விதிகளில் மன்னிப்பு என்ற ஓர் உட்பிரிவு உண்டு. உடன்படிக்கை விதிகள் ஒருதடவை மீறப்பட்டாலும் இன்னொரு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது (இச 30:1-5; விப 34:6-7; திபா 103:8-10). மனம் திருந்தி உடன்படிக்கை உறவிற்கு மீண்டும் அர்ப்பணித்தால் ஆண்டவர் மன்னித்து ஏற்றுக் கொள்வார். மறு சீரமைப்பு செய்வார். பாவத்தால் கடவுளைவிட்டுப் பிரிந்த இஸ்ரயேல் மனம் திருந்தி கடவுளிடம் வரவேண்டும். அவருக்குக் கீழ்ப்படிந்து வாழ வேண்டும். இப்பகுதியில் வருகின்ற சிதறடித்தல் மற்றும் கூட்டிச் சேர்த்தல் போன்ற குறிப்புகள் நாடுகடத்தப்படுதலை மையமாகக் கொண்டவை (30:1-5). இச 30:6 இல்


உன் கடவுளாகிய ஆண்டவர் உன் உள்ளத்தையும் உன் வழிமரபின் உள்ளத்தையும் பண்படுத்துவார் (30:6) என வாசிக்கிறோம் இங்கே பண்படுத்துவார் என்ற சொல்லுக்குப் பதிலாக விருத்தசேதனம் செய்வார் என்றும் மொழி பெயர்க்கலாம். விருத்தசேதனம் என்ற சொல் உருவகமாகப் பயன்படுத்தப்படுகிறது. விருத்தசேதனம் என்பது உடன்படிக்கையையும் அதன் கடமைகளையும் முழுமையாக ஏற்று அதற்காக ஒருவரை முழுமையாக அர்ப்பணம் செய்வதை உருவகமாகக் கொண்டுள்ளது. விருத்தசேதனம் ஒரு நேர்மறையான மாற்றத்திற்கு உருவகமாக பல இடங்களில் விவிலியம் பயன்படுத்துகிறது (இச 10:16; எரே 4:4; 9:25; காண் உரோ 2:29). இஸ்ரயேல் மக்கள் வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆண்டவர்மீது பற்றுகொள்ள வேண்டும். ஆண்டவரை முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் அன்பு செய்யவேண்டும் (30:6).

இச 30:15-20 வரையுள்ள இறைச் சொறொடர்கள் மோசேயின் மூன்றாவது உரையின் சுருக்கமாகவும் இஸ்ரயேல் மக்கள் வாழ்வையும் நன்மையையும் தேர்வுசெய்வதற்கு விடுக்கும் அழைப்பாகவும் உள்ளது. மோசே மக்களுக்குக் கூறவேண்டியது அனைத்தையும் கூறிவிட்டார். இறுதியில் விண்ணையும் மண்ணையும் சான்றாக அழைத்து,

வாழ்வையும் சாவையும், ஆசியையும் சாபத்தையும் (30:19) மக்கள் முன்வைக்கிறார். மக்கள் தேர்வு செய்யவேண்டும். அவர்கள் எதைத் தேர்வு செய்கிறார்கள் என்பதைப் பொருத்துதான் அவர்களின் எதிர்காலம் அமையும். இங்கே வாழ்வு மற்றும் ஆசி ஆகியவை வளம் நிறைந்த, செழிப்பான, மகிழ்ச்சியான வாழ்வைக் குறிக்கும். சாவு மற்றும் சாபம் என்பது நாட்டிலிருநது வெளியேற்றப்படுவதையும், நோய் நொடிகளாலும் வரட்சியாலும் பாதிக்கப்பட்டு சாவை எதிர்கொள்வதையும் குறிக்கும். பண்டைய மேற்காசிய நாடுகளில் செய்யப்படுகின்ற உடன்படிக்கைகளில் இத்தகைய தேர்வுகளும் இணைக்கப்பட்டன. இருக்கும். படைப்புகளில் ஆற்றல் வாய்ந்த அல்லது அழிவை ஏற்படுத்தவல்ல சக்திகள் உடன்படிக்கையை மீறுகின்ற பங்காளிக்கு முறையான நீதியை வழங்கமுடியும் என மக்கள் நம்பினார்கள். இந்த அறிவுரை எல்லாத் தலைமுறையினரும் நேர்மறையானதைத் தேர்வு செய்ய வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்துகிறது. உடன்படிக்கை சடங்கை புதுப்பிப்பதுடன் எல்லாம் முடிந்து விடுவதில்லை. பழையனவற்றை நினைவுகூர்வது மட்டும் போதாது. வாழ்வையும் நன்மையையும் தேர்வு செய்வது அன்றாட வாழ்வில் வெளிப்படுத்தப்பட வேண்டும். மோசேயின் அறிவுரைகளுக்கும் போதனைகளுக்கும் மக்கள் எந்தப் பதிலையும் கொடுப்பதாக இங்கே பதிவு செய்யப்படவில்லை. எல்லாத் தலைமுறையினரும் எதைத் தேர்வு செய்வது என்பதை தீர்மானிக்க வேண்டும். இஸ்ரயேல் மக்கள் வாழ்வையும் நன்மையையும் தேர்வு செய்ய வேண்டும். வாழ்வையும் நன்மையையும் தேர்வு செய்வதற்கு மக்கள் கடவுளின் கட்டளைகளைக் கடைபிடிக்க வேண்டும். கட்டளைகளைக் கடைபிடித்து வாழ்வதுதான் அவர்களுக்கு ஆசிராக அமையும்.

பயணம் தொடரும்,
அருட்பணி.முனைவர்.
ஆ. அலெக்ஸ் cmf





அருட்பணி.ஸ்டீபன் கஸ்பார்
புனித.சகாய அன்னை ஆலயம்
சின்னாளபட்டி
திண்டுக்கல் மறைமாவட்டம்

# ஞாயிறு மறையுரை



**பொதுக்காலம்
6ம் வாரம்
04.02.2024**

**திருப்பலி வாசகங்கள்**

லேவியர் 13/1-2, 44-46
1கொரி 10/31-11/1
மாற்கு 1/40-45

இறை இயேசுவிலே எனக்கு மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே இன்று ஆண்டின் பொதுக்காலம் 6ம் ஞாயிறு. நம்மை இயேசுவாக வாழ அழைக்கும் இறைச் செய்தியை உள்வாங்கிட , திருவிருந்தைக் கொண்டாட ஒரு குடும்பமாகக் கூடிவந்துள்ளோம்.

அன்பர்களே, இல்லை என்ற சொல்லுக்குச் சொந்தக்காரர்கள் ஏழைகள். பணம் இல்லையா? பாசம் இல்லையா? உடல் நலம் இல்லையா? அந்தஸ்து இல்லையா? அழகு இல்லையா? இவர்களும் ஏழைகள்மான் இன்றைய நற்செய்தியிலே வரும் ஏழை தொழுநோய் கண்ட மனிதன் இயேசுவிடம் வருகிறான். நம்பிக்கையோடு வருகிறான். உற்றார், உறவினர், நண்பர், ஊரார் என அனைவராலும் புறக்கணிக்கப்பட்டவன். ஊருக்குப் புறம்பே குப்பைக் கூழங்கள் கொட்டுமிடத்திலே ஒதுக்கிவைக்கப்பட்டவன். முதல் வாசகக் கூற்றுப்படி, தீட்டு, தீட்டு எனக் குரலெழுப்பிடவேண்டும். அவன் கிழிந்த உடை உடுத்தி பரட்டைத் தலையுடன் மேலுதட்டை மறைத்துக்கொண்டு வாழ்பவன். அவன் தொழுநோய் கண்டவன். யூத சமூகத்தில் தொழுநோய் தீட்டுநோய். இறைவனின் சாபமாகக் கருதப்பட்டது. சமூக உறவிலிருந்தும் குடும்ப உறவிலிருந்தும் புறந்தள்ளப்பட்ட அந்த ஏழை இயேசுவை நம்பி வந்து, நீர் விரும்பினால் உம்மாலே என்னைக் குணமாக்க முடியுமென்றான்.

இந்த இயேசு ஏழையரோடு தம்மை ஐக்கியப்படுத்திக்கொண்டவர். இவர் ஏழ்மையில் பிறந்து, ஏழ்மையில் வாழ்ந்து, ஏழ்மையில் இறந்தவர். அவர் ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் பிறந்தபோது பிறப்பதற்கு இடமில்லை. இறந்தபோது அவருக்கென்று சொந்தக் கல்லறைகூட இல்லை. ஓர் ஏழைப் பங்காளனாய் தம்மை உலகிற்கு அறிமுகப்படுத்திக்கொண்டவர். எழைகள் எந்நாளும் உங்களோடே என்று சொன்னவர். ஏழைகளே நீங்கள் பேறுபெற்றவர் என போதித்தவர். அவர் தன்னைத் தேடிவந்த தொழிநோயால் அனைத்தையும இழந்து ஏழையான அந்த மனிதனை மதித்து, மனிதநேயத்தோடு இன்றைய நற்செய்தியிலே கேட்டோம்.

ஏழைகளோடு தன்னை ஐக்கியப்படுத்திய இயேசுவாக நீயும் நானும் வாழமுடியுமா? இன்றைய இரண்டாம் வாசகத்திலே தூய பவுல் நான் கிறிஸ்துவவைப்போல நடப்பதைப்போன்று நீங்களும் என்னைப்போன்று நடங்கள் (1கொரி 11/1). என்கிறார். ஆம் கிறிஸ்துவபைப்போல வாழ்ந்தவர்கள். உயர்ந்த மனிதர்கள் வாழ்ந்துள்ளார்கள். வாழ்ந்துகொண்டு இருக்கின்றார்கள்.

ஏழைகளின் உடலிலும், இரத்தத்திலும் கிறிஸ்துவை மதிக்காத ஒருவர் நற்கருணையிலுள்ள கிறிஸ்தவின் உடலையும், இரத்தத்தையும் மதிக்க முடியாது. கிறிஸ்துவே ஏழையில் ஏழையாக தொழுநோயிலே தொழுநோயாளியாக இருக்கிறார். புனித அசிசியார் ஒரு தொழுநோயாளியை ஆரத்தழுவி முத்தம் கொடுத்தபோது, அத்தொழுநோயாளியின்

முகம் கிறிஸ்துவின் முகமாய் மாறியதைக் கண்டார். தொழிநோயால் பீடிக்கபட்ட ஓர் இந்து பூசாரியைத தன் மடியிலே வைத்து முத்தம் செய்த புனிதை அன்னைத் தெரசாவின் முகத்தில் காளி தேவதையை அந்த பூசாரி பார்த்தார்.

மற்றவர்களை நாம் இயேசுவைப் போன்று தொடவேண்டும். தொடவிட வேண்டும். நமது தொடுதல் குணமளிக்கும் தொடுதலாக இருக்க வேண்டும். தீண்டப்பட அருகதையற்றவர் என்று யாருமே அகராதியில் இருக்கக் கூடாது. கிறிஸ்வதவரிடம் தீண்டாமை என்பது இருக்கக்கூடாது. அது ஒரு கொடிய பாவம். பயங்கரமானது. தொழுநோயிலிருந்து விடுதலை கண்டவன் தன்னை குருவிடம் காட்டி அத்தாட்சி பெற்றே உறவுகளை, நட்புகளைச் சந்திக்க வேண்டும் என்பது யூதச்சட்டம்.

அதன் பயனாக ஊருக்குப் புறம்பாக்கப்பட்டவன் ஊருக்குள்ளே வருகிறான். தீண்டத்தகாதவனாக சமுதாயத்தினால் புறம்பாக்கப்பட்டவன் சமுதாயத்திற்குள் உள்வாங்கப்படுகிறான். மனித மாண்பையும் உரிமையையும் இழந்த அம்மனிதன் கிழிந்த கந்தலுடை உடுத்தி அரைவயிற்றுக் கஞ்சிக்கு அல்லல்பட்ட அவன் எருசலேம் ஆலயத்தினுள் நுழைய உரிமை பெறுகிறான். இதுதான் அன்பர்களே, நம் ஆண்டவர் இயேசு செய்த சமுதாயப் புரட்சி. தொழிநோயைக் குணப்படுத்துவதைவிட சமுதாயத்தைக் குணப்படுத்தியதே அவர் செய்த மாபெரும் புரட்சியாகும்.

ஆம் அன்பர்களே, தொழுநோய்போல சாதியம் என்னும் சமூகப்பாவம் இன்னும் கிறிஸ்துவத்தை, கிறிஸ்துவிடமிருந்து அந்நியப்படுத்திக் கொண்டே இருக்கிறது. சாதியம் நம்மிடமிருந்து களையப்படாதவரை நாம் கத்தோலிக்க கிறிஸ்தவர்களென கூறிக்கொள்ளக் கூச்சப்படவேண்டும். திருச்சபையின் தலைவர்களோடு இணைந்து மாற்றத்தை உருவாக்கி மறுமலர்ச்சிக்குத் தோள்கொடுக்க நாம் அனைவரும் இப்பெரு முயற்சியில் செயல்பட முன்வருவோம். அதற்காக நம்மை இழக்க முன்வருவோம். மனித மாண்பு காக்கப்பட, மனித நேயம் கட்டி எழுப்பப்பட சுயகௌரவத்தை இழக்க முன்வருவோம். அப்பொழுதுதான் நாம் இயேசுவைப்போல புதுமை செய்து புரட்சியாளராக முடியும். சாதியம் கடந்து நீதியில் நிலைத்து சமுதாய மாற்றம் காண மனித நேயத்தோடு வாழ்ந்து காட்டும், காட்டிய புரட்சியாளர்களோடு இன்றும் இணைந்து செயல்படுவோம். அப்பொழுதுதான் பவுலைப்போல நான் கிறிஸ்துவைப்போல நடப்பதுபோன்று நீங்களும் என்னைப்போல நடங்கள் என்று சவால்விடமுடியும். அப்பொழுது இனி வாழ்பவன் நானல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார் எனக் கூறமுடியும். ஆமென்.





# பொதுக்காலத்தின் ஆறாம் ஞாயிறு

லேவி. 13 : 1-2, 44-46 1கொரி. 10 : 31 - 11:1
மாற். 1 : 40 - 45

**11-02-2024**




பா. சேவியர்
திண்டுக்கல்


## திருப்பலி முன்னுரை

உலகில் கிறிஸ்துவைப்போல் செயல்பட்டு, அனைத்திலும் அனைவருக்கும் உகந்தவராய் வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் ஆறாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கின்றேன்.

சமுதாயத்தால் புறக்கணிக்கப் பட்டோர், தீண்டத்தகாதவர் என ஒதுக்கப்பட்டோர், நோயால் துன்புறுவோர் ஆகியோரை நாம் ஆதரித்து அரவணைக்கின்றோமா? அவர்களின் துயர் துடைக்க நாம் முயல்கின்றோமா? என்ற கேள்விகளை முன்னெழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றைய வழிபாடு.

உலகில் தீண்டாமைச் சுவரை இடித்துத் தரைமட்டமாக்கிய முதல் மனிதர் இயேசு. பார்த்தால் பாவம், தொட்டால் தீட்டு என்று கருதப்பட்ட தொழுநோயாளியைத் தொட்டு குணமாக்குகிறார். எங்கெல்லாம் மனித மாண்பும் மனித நேயமும் சிதைக்கப்படுகிறதோ அங்கெல்லாம் விமோச்சனத்தைப் பிரகடனப்படுத்துகிறார். இறைவனின் சாயலாய் படைக்கப்பட்ட ஒவ்வொருவரும் மனித மாண்புக்குரியவர்கள் என்பதை சொல்லாலும் செயலாலும் நிருபிக்கிறார்.

இயேசு மக்களைத் தொட்டாலும், மக்கள் இயேசுவைத் தொட்டாலும் வல்லமை அவரிடமிருந்து வெளிப்படுகிறது. இன்றும் இத்திருப்பலி வழியாக இயேசு நம்மைத் தொடக் காத்திருக்கிறார். அருள் அடையாளங்கள் வழியே நாமும் அவரைத் தொடத் தயாராவோம்.

ஆண்டவரை மாத்திரமே நமது புகலிடமாகக்கொண்டு எதைச் செய்தாலும் அவருடைய மாட்சிக்காகச் செய்யவும், நமக்குப் பயன் தருவதை நாடாமல் நமக்கு அடுத்திருப்போருக்கு பயன் தருவதையே நாடவும், சமத்துவச் சிந்தனையுடன் வாழவும் வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## முதல் வாசக முன்னுரை

திருப்பணியாளர்கள் மற்றும் குருக்களின் பணி பற்றியும், வழிபாட்டு முறைகள் பற்றியும் கூறுகின்ற லேவியர் நூலிலிருந்து இன்றைய முதல் வாசகம் அருளப்பட்டுள்ளது. தொழு நோயாளியர் மட்டில் குருவின் பணி குறித்து எடுத்துரைக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்தவ அருள்நெறி பற்றி தூய பவுலடியாரின் கருத்துக்களை சுமந்து வருகிறது இன்றைய இரண்டாம் வாசகம். கடமைகளையும் கட்டளைகளையும் கடைப்பிடித்தால் மட்டும் போதாது, நம் வாழ்வின் ஒவ்வொரு செயலும் விசுவாசத்தின் வெளிப்பாடாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ அவை மன்னிக்கப்படும் என்று சொன்ன கருணைக் கடலே இறைவா, திருமுழுக்கு என்ற தண்ணீரைக் கொண்டும், ஒப்புரவு அருட்சாதனம் என்ற கண்ணீரைக் கொண்டும் மனித சமுதாயத்தின் பாவக் கறைகளைக் கழுவி சுத்தம் செய்யும் உன்னதப் பணிகளை ஆற்றி வரும் உம் திருஅவையின் தலைவர்கள் நல்ல உடல் நலத்துடனும் ஆன்ம பலத்துடனும் செயலாற்ற வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) எம்மைவிட்டு விலகாமலும், எம்மை என்றும் கை நெகிழாமலும் இருக்கின்ற எம் தந்தையே இறைவா, துன்ப வேளையில் காக்கும் கடவுளாகிய நீர் எம்மோடு இருக்கின்றீர் என்ற நம்பிக்கையின் துணைகொண்டு துன்பங்களை எதிர்கொள்வதற்கான மனத்திடனையும், மனப்பக்குவத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) அனைத்தையும் ஆண்டு நடத்தும் தந்தையே இறைவா, உடலை அழுகச் செய்யும் தொழு நோயை விட, ஆன்மாவை அழுகச் செய்யும் பாவத் தொழுநோய் மிகவும் ஆபத்தானது என்பதை நாங்கள் உணர்ந்து, அத்தகையப் பாவத் தொழு நோயினை ஒப்புரவு அருள் அடையாளத்தின் வழியாகப் போக்கி குணமாகி நலம் பெற வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) பரிவன்புமிக்கத் தந்தையே இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் உம்மை மாத்திரமே எமது புகலிடமாகக் கொண்டு, உண்டாலும் பருகினாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் உம்முடைய மாட்சிக்காகவே செய்யவும், எமக்குப் பயன் தருவதைவிட எமக்கு அடுத்திருப்போருக்குப் பயன் தருவதையே நாடி உம் வழியில் பயணிக்க அருள் புரிய வேண்டுமென்று இறவா உம்மை மன்றாடுகின்றோம்.



# திருநீற்றுப் புதன்

யோவே. 2 : 12–18 2 கொரி. 5 : 20, 6 : 2

மத். 6 : 1–6, 16–18

**14-02-2024**



பா. சேவியர்
திண்டுக்கல்

**திருப்பலி முன்னுரை**

உலக வாழ்க்கை நிலையானதல்ல என்பதற்கு அடையாளமாய் நெற்றியில் சாம்பல் பூசி தவக்காலத்தைத் துவங்க வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் "மனம் திரும்பி நற்செய்தியை நம்பி வாழ" அழைக்கும் திருநீற்றுப் புதன் திருவழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்று நாம் தொடங்கும் தவக்காலம் இறையருளின் காலம், மன்னிப்பின் காலம், மனம் வருந்தி மன்னிப்புப் பெற்று புதிய வாழ்வு வாழ நம்மை அழைக்கும் காலம், நோன்பிருந்தும், செபம் செய்தும், தர்மம் புரிந்தும் இறைவனின் இரக்கத்தைப் பெற அவரால் கொடுக்கப்பட்ட சிறப்பான காலம்.

நோன்பு, அறச்செயல்கள், இறைவேண்டல் என்னும் முப்பெரும் தவச் செயல்களில் ஈடுபட இன்றையத் திருப்பலி நம்மை அழைக்கிறது.

நாம் ஒவ்வொருவரும் மனம் திரும்பி கடவுளிடம் வர வேண்டும், கடவுளோடும் – நம்மோடும் – நமக்கு அடுத்திருப்பாரோடும் ஒப்புரவாக வேண்டும். தபம் செபம் தர்மங்கள் வழியாக கிறிஸ்துவுக்கு ஏற்புடைய மக்களாக வாழ வேண்டும் என்பதை இன்றைய வார்த்தை வழிபாடு நமக்கு உணர்த்துகிறது.

இன்று நாம் தொடங்கும் இத்தவக்காலம் அருளின் காலமாக அமைந்திட, இறைவனின் இரக்கத்தையும் மன்னிப்பையும் பெற்று அவருக்கேற்ற மக்களாக வாழ்ந்திட வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

நம் விண்ணகத் தந்தை, மண்ணக மாந்தர்களாகிய நம்மிடமிருந்து எவைஎவற்றை எதிர் நோக்கு கின்றார் என்பதை எடுத்துரைத்து, நம்மை மன மாற்றத்திற்கு அழைக் கிறது இன்றைய முதல் வாசகம். மனம் மாறிய ஒரு புது வாழ்வுக்கு இறைவனே நம்மை அழைப்பதாக அமைந்துள்ள இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

பெறுதற்கரிய கொடையான மீட்பை நமதாக்கிக்கொள்ள நம்மை நாமே மனமாற்றத்திற்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும், அதற்குரிய காலம் இத்தவக்காலம் என்பதை இன்றைய இரண்டாம் வாசகம் மூலம் திருதூதர் பவுல் எடுத்துரைக் கின்றார். உங்களது உள்ளங்களை தூய்மையாக்குங்கள் என்ற அறை கூவலையும் ஒப்புரவாக்குங்கள் என்ற வேண்டுகோளையும் சுமந்து வரும் இவ்வாசகத்தைக் கவன முடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) அருள் நிறைந்தவரும் இரக்கம் மிகுந்தவருமான அன்பு இறைவா, உமது அன்பையும் கருணையையும் உலக மாந்தருக்கு எடுத்துரைத்து, அனைவரையும் ஒப்புரவாக்கும் ஒப்பற்றுப் பணிபுரியும் உம் திருத் தூதர்களான எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவருக்கும் நல்ல உடல் நலத்தையும், சிறந்த ஞானத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2) பொறுமையும் பேரன்பும் மிகுந்த வருமான அன்பு இறைவா, எங்கள் நெற்றிகளில் திரு நீற்றுத் திலகமிட்டு தவக்காலமாம் தியாக காலத்தை தொடங்குகின்றோம். நீர் வழங்கிய இந்த அருளின் காலத்தை நாங்கள் சரியாகப் பயன்படுத்தி, மனம் திருந்தி, எமது பலவீனங்களை உமது பலத்தின் மூலம் நிவர்த்தி செய்து வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) அன்பும் கருணையும் நிறைந்த இறைவா, நாங்கள் இன்று தொடங் கும் தவக்காலம் உமது அருளின் காலமாக அமைந்திட அருள் தாரும். இந்நாட்களில் நாங்கள் நோன் பிருந்து, செபித்து, அன்புச் செயல் களில் ஈடுபட்டு உமது இரக்கத் தையும் மன்னிப்பையும் நிறைவாகப் பெற்று, உமது திருவுளத்திற்குப் பணிந்து வாழும் வாழ்வைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) இரக்கத்தின் வடிவே இறைவா, எங்கள் குடும்பங்களை உம் திருப் பாதம் ஒப்படைக்கிறோம். நற்செய்தி யைப் பின்பற்றி விசுவாசத்துடன் வாழவும், எம் பிள்ளைகள் நல்ல முறையில் படித்து, நன்றாகத் தேர்வு எழுதி, உயர்ந்த மதிப்பெண்களைப் பெற்று வெற்றி பெறவும், அவர் களுக்கு நல்ல எதிர்காலம் அமைய வும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடு கின்றோம்.

# ஞான வெளிச்சம் தரும் பொன் மொழிகள்



நல்லவர்கள் நடிக்கமாட்டார்கள்
எந்நிலையிலும் இயல்பு மாறாது

கொடுக்கப்படும் பரிசு  என்று பாராதே
அதைக் கொடுப்பவரின் உள்ளத்தைக் கவனி. – ரூமி

செயல்திறன் அதிர்ஷ்டத்தால் வருவதல்ல
உயர்ந்த லட்சியம், உண்மையான கடும் முயற்சி,
புத்திசாலித்தன உழைப்பால் வருவது அது. – அரிஸ்டாட்டில்

பசியோடு இருக்கும் எல்லா நாய்க்கும் உணவிடாதீர்
உங்களைக் கடிக்க தேவையான சக்தியை அதனால் பெறும்

உங்களின் மதிப்பு தெரியாது உங்களை அவமானப்படுத்தும்
துன்பப்படுத்துபவர்களுக்காக உங்களின் பொன்னான நேரத்தை
வீணாக்காதீர்கள்.

பணம் மனிதர்களை மாற்றுவதில்லை, மாறாக
அவர்களின் சுயரூபத்தை வெட்டவெளிச்சமாக்கும்

புழுவாய் இருக்கும்வரை தள்ளி நிற்கும் உலகம்
பட்டாம்பூச்சியானபின் ரசிக்க, வர்ணிக்க பிடிக்க பின் தொடரும்.

அடிதாங்கிய ஆணி நிலைத்து நிற்கும்
அடித்த சுத்தியல் ஏதாவது ஒரு மூலையில்தான் கிடக்கும்.

எப்போதும் நல்ல மனநிலையில் இருக்க நீங்கள் எடுக்கும்
தீர்மனமும், முயற்சியும் ஒப்புயர்வற்றவை.

காலமும், பொறுமையும் உலகின்
மாபெரும் போராளிகள்.

உங்களைவிட்டுப் பிரிபவையினால் இழப்பு இல்லை.
அதைவிடச் சிறந்தவை வரப்போவதின் அடையாளம் அது

# சங்க இலக்கியச் சுவை





### இன்று நற்றிணையில் இருந்து ஒரு பாடல்.

நற்றிணை, எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்துப் போற்றப்படுவதாகும். நல்ல திணை என்ற அடைமொழியால் போற்றப்படும் சிறப்பினை உடையது. இது நானூறு பாடல்களைக் கொண்டது. ஒன்பது அடிகளை சிற்றில்லையாகவும், 12 அடிகளை பேரெல்லையாகவும் கொண்டது. நற்றிணையைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி.

தலைவி இல்லறம் ஆற்றும் செவ்வியைப் பாராட்டிச் செவிலித்தாய் நற்றாயிடம் கூறிய இப்பாடலினை எழுதியவர் போதனார். இவர் சங்க காலப் புலவர். நற்றிணையில் 110 ஆம் பாடலை மட்டும் பாடியுள்ளார். நற்றிணையின் பேரெல்லை 12 அடிகள். விதிவிலக்காக 13 அடிகளைக் கொண்டதாக இவரது பாடல் அமைந்துள்ளது.

வளமையும், வறுமையும் வாழ்க்கை என்னும் நாணயத்தில் இரு பக்கங்கள் ஆகும். வறுமையில் செம்மையாய் வாழ அறிவுறுத்துவது கல்வி. இம்மாண்பு சிலருக்கு இயல்பிலேயே கைகூடும். வளமான மனையில் பிறந்த பெண்ணொருத்தி குறைந்த வளமுடைய தலைவன் வீட்டிலும் தன்னிலை மாறாது வறுமையில் செம்மையாய் வாழ்கின்ற காட்சியை படம் பிடிக்கிறது நற்றிணையின் இப்பாடல்.

பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர் பொற்கலத்து ஒரு கை ஏந்திப்
புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்என்று ஒக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்று
அரிநரைக் கூந்தற் செம்மது செவிலியர்
பரீஇ மெலிந்துஒழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறு விளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்

பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே(110)
-போதனார்.

திருமணம் முடிந்து கணவன் வீட்டில் வசிக்கும் தலைவியைக் காண சென்று வந்த செவிலி, நற்றாயிடம் மகள் வறுமையிலும் செம்மையாக வாழ்வதைச் சொல்லி இத்தகைய இல்லற அறிவை எப்படிப் பெற்றாள் எனவே என்று வியந்து கூறுதல்.

மகள் நிலை உரைத்தல் என்பது தலைவனோடு உடன் போக்கிய விளையாட்டுப் பருவம் மாறாத மகள் இல்லறம் ஆற்றும் பங்கை நற்றாயிடம் செவிலித்தாய் எண்ணிக் கூறுவது. இத்துறை மனைமருட்சி என்றும் கூறப்படும்.

பாடலின் பொருள்:


நம் வீட்டில் தேன் கலந்த இனிய பால் உணவை ஒளிமிக்க பொற்கலத்தில் இட்டுச் செவிலி தாயார் ஒரு கையில் ஏந்தி வருவர். நம் மகளை உண்ண வைப்பதற்காக இன்னொரு கையில் பூச்சுற்றிய மென்மையான சிறுகோலை வைத்திருப்பர். வீட்டின் முற்றத்தில் பந்தரின் கீழ், இதை உண்பாயாக எனச் செல்லமாக அக்கோலால் அடித்து வேண்டுவர். மகளோ, நான் உன்னேன் என மறுத்து முத்துப்பரல்கள் இட்ட பொற் சிலம்பு ஒழிக்க அங்கும் இங்கும் ஓடுவாள். செவிலித்தாயார் அவளைப் பின்தொடர முடியாமல் நடைதளர்ந்து நிற்பர். இப்படிப்பட்ட விளையாட்டுப் பெண் நம் மகள். இவள் எப்படி இப்போது இத்தகைய அறிவையும், இல்லற நடைமுறையும் கற்றாள்? தான் மணந்து கொண்ட கணவன் வீட்டில் வறுமையுற்ற நிலையிலும் கணவன் வீட்டில் தன் தந்தையின் வீட்டில் பெற்ற வளமான உணவினைப் பற்றி நினைத்துப் பாராள். ஓடுகின்ற நேரிலே கிடக்கும் நூல் மணலில் இடைவெளி இருப்பது போல் ஒரு பொழுது இடைவெளி விட்டு ஒரு பொழுது உண்ணும் வன்மை பெற்றிருக்கிறாள். இது என்ன வியப்பு?

நம் திருவிவிலியத்தில்,

நல்ல மனையாள் செயல்களைப் பற்றி நீதிமொழிகள் 31 ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதில் அவளுடைய பிள்ளைகள் அவளை நற்பேறு பெற்றவள் என வாழ்த்துவார்கள். அவளுடைய கணவன் அவளை மனமாரப் புகழ்வான். திறமை வாய்ந்த பெண்கள் பலர் உண்டு; அவர்கள் அனைவரிலும் சிறந்தவள் நீயே என்று அவன் சொல்லுவான்.
(நீதிமொழிகள் 31: 28இ 29)

இயேசுவுக்கே மகிமை
லீமா விக்டோரியா, தமிழாசிரியை.



# விடியல்



இளைஞர்களே, நீங்கள் முதியவர்களுக்குப் பணிந்திருங்கள். ஒருவர் மற்றவரோடு பழகும் போது எல்லாரும் மன தாழ்மையை ஆடையால் அணிந்திருங்கள். ஏனெனில், செருக்குற்றோரைக் கடவுள் இகழ்ச்சியுடன் நோக்குவார்; தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார். ஆகையால், கடவுளுடைய வல்லமை மிக்க கரத்தின்கீழ் உங்களை தாழ்த்துங்கள்; அப்பொழுது அவர் ஏற்ற காலத்தில் உங்களை உயர்த்துவார். –(1பேதுரு 5:5,6).

அன்புக்குரியவர்களே.. கிறிஸ்தவ வாழ்வில் துன்பங்கள், சோதனைகளை மேற்கொள்ளும்போது ஏதோ எதிர்பாராதது நேர்ந்து விட்டது என நாம் வியப்பு அடைய வேண்டாம். மாறாக கிறிஸ்துவின் துன்பங்களோடு நாமும் பங்கு கொள்கின்றோம், என பெருமிதம் அடைய வேண்டும். அப்பொழுது இறைவனுடைய மாட்சி நம் வழியாக வெளிப்படும், என்பதை குறித்து நாம் மகிழ்ந்து பேருவகை கொள்ள வேண்டும். பிறர் நம்மை காரணம் மின்றி வசைக் கூறும்போது நாம் பேறு பெற்றவர்கள். ஏனெனில், கடவுளின் மாட்சிமிக்க தூய ஆவி அப்போது நம்மில் தங்கும்.

எல்லாவிதமான துன்ப நேரங்களிலும் நாம் நன்மை செய்வதில் நிலைத்திருந்து, தூய மக்கள் இனமாக, அவரது உரிமை சொத்தாக நம்மையே நாம் இறைவனிடம் அர்ப்பணிப்போம். ஏனெனில் அவரே நம்ப தகுந்தவர். ஆகவே, நாம் ஒவ்வொருவரும் தாம் பெற்றுக் கொண்ட அருள் கொடையை பயன்படுத்தி, ஒருவருக்கொருவர் பணிபுரிய வேண்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு பணியிலும் கடவுளின் அருளையும், ஆற்றலையும் வெளிப்படுத்த வேண்டும்....

## அலெக்சாண்டர் கிரகாம் பெல்

செல்பேசியை கையில் ஏந்தும் போதெல்லாம் இதற்கு அடிப்படை ஆதாரமான தொலைபேசியை கண்டுபிடித்த அலெக்சாண்டர் கிரகாம்பெல் என்பவரினுடைய நினைவுகள் தான் நமக்கு வரும். இவர் 1847 இல் ஸ்காட்லாந்து நாட்டில் உள்ள எடின்பர்க் நகரில் பிறந்தார். இவரது தந்தை ஆசிரியராக பணியாற்றினார். அதிலும் பேச முடியாத, காது கேட்காத மாணவ, மாணவிகளுக்காக தன்னுடைய வாழ்நாளில் பெரும் பகுதியை அர்ப்பணித்தார். எட்டு வயதாக இருக்கும்போது பெல் பியானோ வாசிப்பதில் வல்லவராக திகழ்ந்தார். பத்து வயதானபோது படிப்பை விட பியானோ வாசிப்பதிலும், ஒலி அலைகளை மின் ஒலியாக மாற்றும் ஆராய்ச்சியிலும் அதிக நேரம் ஈடுபட்டார். பெல்லினுடைய அம்மாவிற்கு காது கேட்காது. அவர் விரும்பி தேர்ந்தெடுத்த பெண்ணான அவரது மனைவிக்கும் காது கேட்காது. தம்முடைய இல்லத்தில் தம் சொந்த குரலையே தம் வீட்டு பெண்களால் கேட்க முடியாது. இத்தகைய

சூழ்நிலையில் ஒலி அலைகளினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்த பெல் நேர்மறையான சிந்தனையோடு உலகம் முழுவதிலுமுள்ள ஒவ்வொருவருடைய குரலையும், உணர்வுகளையும் எதிர்தரப்பில் உள்ள ஒருவர் கேட்கக்கூடிய ஒரு மாபெரும் கண்டுபிடிப்பான தொலைபேசியை கண்டறிந்தார்... 1876-ல் உலகின் முதல் தொலைபேசி கண்டறியப்பட்டது. அதில் பேசிய வாசகங்கள்...

பெல் தனது உதவியாளரான வாட்சனிடம் முதன் முதலில் இவ்வாறாக பேசுகின்றார். வாட்சன் இங்கே வாருங்கள், உங்களை காண வேண்டும். ("Watson come here, I want to see.") அப்பொழுது அவரும், அவருடைய குழுவினரும் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இருந்திருக்காது. உணர்ச்சிகளால் வெளிப்படுத்த முடியாத மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து இருப்பர். ஆனால், அந்த நேரத்தில் உலகம் இதை ஒரு பொருட்டாக எண்ணவில்லை, இதற்கு அக்கறையோ அங்கீகாரமோ வழங்கவில்லை. பெல் மிகவும் சோர்வடைந்தார். அதே ஆண்டில், அமெரிக்காவில் பிலெடெல்பியாவில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில் இந்த தொலைபேசியை மக்கள் பார்வை முன் வைத்தார் . அந்த கண்காட்சிக்கு வந்திருந்த பிரேசில் மன்னர் வியப்போடு இதைப் பார்த்தார். பயன்படுத்தினார்.

ஆ !கடவுளே! கேட்கிறது! பேசுவது கேட்கிறது! என்று உதடுகள் முணுமுணுக்க இன்ப அதிர்ச்சி அடைந்தார். அதன் பிறகு தான் உலகம் இவரை உற்று நோக்கியது. அந்த கண்டுபிடிப்பினுடைய அருமையை மக்கள் உணர ஆரம்பித்தனர். பெல் தன்னுடைய வாழ்நாளில் 59க்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து காப்புரிமை பெற்றார்..

கண் தெரியாதவர்களுக்கு பிரெய்லி முறையை கண்டுபிடித்த ஹெலன் கெல்லருக்கு சிறுவயதில் பல உதவிகள் செய்தார். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தன் தந்தையைப் போலவே காது கேட்காமல், வாய் பேச முடியாமல் இருந்தவர்களுக்கு பள்ளிக்கூடம் ஆரம்பித்து பல நன்மைகள் செய்தார். அவர்களின் நல் வாழ்விற்காக பாடுபட்டார். இன்றைய காலகட்டங்களிலே உலக விஷயங்களை ஒரு நொடியில் எந்த மூலையில் இருந்தாலும் பரிமாறிக் கொள்வதற்கு அற்புதமான ஒரு சாதனம் தொலைபேசி. அதனை கண்டுபிடித்த பெல் பலவிதமான கடினமான பாதைகளை, பயணித்து கடந்து வந்தவர்.

அன்பு உள்ளம் கொண்டவர். சிறந்த கலைஞர். தேவையில் உள்ளவருக்கு உதவி செய்ய தயங்காதவர். 1922 ஆம் ஆண்டு கனடாவில் அவர் மறைந்தார்.வட அமெரிக்கா முழுவதும் அன்று ஒரு நாள் தொலைபேசி தொடர்பைத் துண்டித்து, அந்த மாமேதைக்கு அஞ்சலி செலுத்தினர்.

குழந்தாய், இளமை முதல் நற்பயிற்சியை தெரிந்து கொள்;
முதுமையிலும் ஞானம் பெறுவாய். சீராக்(6:18).

சிறு வயது முதல் நல்லவற்றை உள்வாங்கி, தாழ்மை என்னும் ஆடையை உடுத்தி, உலக மக்களுக்காக பணி செய்வோம். நம் உழைப்புக்கேற்ற பலன் விடியலை போல எழும்...



# திருக்குறளின் தேனமுதம்



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm

## குறள் 82

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று

## குறள் விளக்கம்

விருந்தினராக வந்தவர் வீட்டின் புறத்தே இருக்கத் தான்மட்டும் உண்பது சாவா மருந்தாகிய அமிழ்தமே ஆனாலும் அது விரும்பத்தக்கது அன்று.

## சிந்தனை

உணவு உறவை வளர்க்க கூடியது. ஒருவருடைய இல்லம் சென்றுவிட்டு உணவு அருந்தாமல் திரும்பினால் மனதில் ஏதோ வருத்தம் என்பர். வீட்டிற்கு வந்தவரை உண்ணாமல் அனுப்ப மாட்டார்கள் நம் முன்னோர்கள். அவர்கள் எவ்வளவு பண்பானவர்கள் என்றால் தங்களிடம் இறப்பைத் தடுக்கும் சாகா மருந்து இருந்தாலும்கூட விருந்தினருக்குக் கொடுக்காமல் உண்ண மாட்டார்கள்.

நம்முடைய இலக்கியத்திலும் அப்படி ஒரு நிகழ்வு உண்டு. சாவைத் தடுக்கும் நெல்லிக்கனி அரசன் அதியமானுக்குக் கிடைத்தும் அதை அவர் உண்ணாமல் தமிழ் மூதாட்டியான ஔவையாருக்குக் கொடுக்கிறார். தன்னைவிட தமிழ்ப்பணிபுரியும் அவர்தான் முக்கியம் என்று சாகா வரம் தரும் கனியை ஔவையாருக்குக் கொடுப்பதைப் பார்க்கின்றோம்.

வேதாகமத்தில் தோபித்து முதல் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தோபித்தின் வாழ்க்கை மிகச் சிறப்பானது. அவர் சிறந்த பண்பாளர். அவர் தன் வருவாயில் பத்தில் ஒரு பங்கை ஆலயத்திருப்பணிக்காகவும் பத்தில் ஒரு பங்கை லேவியரின் பராமரிப்பிற்காகவும், அடுத்த ஒரு பங்கை கைவிடப்பட்டோருக்கும் கைம்பெண்களுக்கும் தேவையில் இருப்பவர்களுக்கும் கொடுத்து ஆண்டவரில் இன்புறுவதைக் காண்கின்றோம்.

இப்படியாக பிறருக்கெல்லாம் கொடுத்து வாழ்கின்றவன் தன் தேவையைப்பற்றி அதிகமாக சிந்திப்பதில்லை. அவர் குறைவாக இருந்தாலும் கொடுத்தார்: நிறைவாக இருந்தாலும் கொடுத்தார். விருந்து அளித்தவர் வருந்துவதில்லை என்பதை அவர் எண்பித்துள்ளார்.